ந்தியடிகள்

விருப்பம் நிறைவேறுக.

தேசிய ஊஞ்சல்

நலுங்கு

கதர் மதுவிலக்கு.

வெளியிட்டவர்

இ. ச. சிவராமலிங்கம்பிள்ளை,

அம்பாசமுத்திரம்

ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ்,

விலை 6-ை

சற்புடைய மாதர்பலர் நூற்றுநெய்த
கதராடை அலங்கரித்த கனக ஊஞ்சல்
விற்பனர் சுதேசநற் பொருள்கள் கொண்டு
வித்தகமாய் அணிபுனைந்த ஊஞ்சல்மீதே
அற்புத விநாயகராம் ஆதிமூலன்
அடி வணங்கி அவனியெலாம் மணமேவோங்க
சிற்பரியாம் பாரதமா தேவிகன்னி
ஜெகத்தில்சுய ராஜியம்பெற ஆடீரூஞ்சல்.

நாகரிகக் கதர்ச்சேலை யாடையாக
நலம்வேண்டி தேசத்தின் நன்மைக்காக
தியாகஞ்செய்து சிறந்துபெருங் கீர்த்திவாய்ந்த
திருமாதர் தேசீயக் கீதம்பாட
ஆகமமு றைப்படியே அந்தணாளர்
அறவேள்வி வளர்த்திடவே அறவோர் போற்ற
வாகைபெறு பாரதமா தேவிகன்னி
வளத்தில்சுய ராஜியம் பெற ஆடீரூஞ்சல்.

வீரர்களும் விவேகர்களும் விரும்பிப்போற்றும்
விசித்திரநற் கதராடை மேலுங்கீழும்
சேரவொருங்கேயணிந்து காந்திக்குல்லாய்
சிரசினிலே புனைந்துதிரு தெய்வக்கோலம்
பேருடைய பெற்றியினைப் பேசும்தோற்றம்
பிறர்நலனே எந்நாளும் கருதுவார்போல்
சீருடைய பாரதமா தேவிகன்னி
திவ்வியசுய ராஜியம்பெற யாடீரூஞ்சல்.

... கார தரமென்ற ஒலிமுழங்க
... ர்கள் பதினெட்டும் வயங்காநிற்ப...

NATIONAL ARCHIVES LIBRARY
No. 2968
Date 9.3.72
GOVT. OF INDIA

பந்திபந்தி யாய்க்கணிகை மாதராட
பவளஇதழ்க் கன்னியர்கள் வட[illegible]
சிந்தையில் பெரியசுய ராஜ்யசேவைத்
திருத்தலைவர் தேசிய வாழ்த்துக்கூற
விந்தைசேர் பாரதமா தேவிகன்னி
வியன்சீர்சுய ராஜ்யம்பெற ஆடிரூஞ்சல்

5 அல்லாஹூ அக்பர்என்ற ஓசைஓர்பால்
அகிலமத ஒற்றுமைக்கு அரணைநிற்ப
சொல்லாலும் பாட்டாலும் தோகைமார்கள்
சுதந்தரத்தின் உரிமைகளைத் தொகுத்துப்பேச
வில்லார்ந்த தொண்டர்படை வாலிபர்கள்
வீரமுடன் அணிவகுத்து விருதுகூற
நல்லார்ந்த பாரதமா தேவிகன்னி
நலஞ்சேர்சுய ராஜியம்பெற ஆடீரூஞ்சல்

6 காந்தியடி களுக்குஜே கோஷமோங்க
கைராட்டனம் நூற்றுப்பலர் காட்சிகாட்ட
வாய்ந்தசிறுக் கன்னியர்கள் வடந்தொட்டாட்ட
மங்கலநல் ஆலத்தி வோர்பால்வந்த
வேந்தர்பலர் ஆகாயத் தந்தியாலே
வியந்தனுப்பும் செய்திபல விளக்கங்காண
சாந்தியுறு பாரதமா தேவிகன்னி
தவஞ்சேர்சுய ராஜியம்பெற ஆடீரூஞ்சல்.

7 பந்தலெல்லாம் தேசியக் கொடிபறக்கப்
பாவையர்கள் இருபுறமுங் கவரிவீச
சந்திரனுஞ் சூரியனும் தீபமேந்த
தகைசான்ற பண்டிதர்கள் சாந்திகூற
இந்துவினை யணிந்தநெல் வேலிகார்க்கும்
இசைமிகுந்த நெல்லையப்பர் கருணை
கந்தம்பெறு பாரதமா தேவிகன்னி
கவின்சீர்சுய ராஜ்யம்பெற

வேடிக்கை ஊஞ்சல்

8 அஞ்சாறு குரங்குகளைக் கால்கட்டி
உதைச்சேர்ந்த மந்திகளை விட்டம்பூட்டி
நெஞ்சார இடர்விளைக்கும் கொச்சர் தம்மை
நிறைவடமாய் கோர்த்திலங்கும் ஊஞ்சல்மீது
மஞ்சாடு கடலாடை உடுத்திவையம்
மலர்கின்ற பாரதமா தேவிகண்ணீர்
விஞ்சாதும் தலைவர்பலர் சூழ்ந்துநிற்க
மேன்மைசுய ராஜ்யபர்பெற ஆடீரூஞ்சல்

எலிக்கும் பூனைக்கும் நலுங்கு

(பூசுவதும் வெண்ணீறு என்றமெட்டு)

எலிதனக்கும் பூனைக்கும் நலுங்குபாட்டு இயம்புவோம்
மலிவாய்ப்பூனை எலியைப்பார்த்து வந்தனங்கள் செய்தனவே
பாண்மேலும் விளைமேலும் பதுங்கியிருக்கும் எலிதனையே
சரண்போன்ற பூனைவந்து தாவிப்பாய்ந்து பிடித்தனவே
இவைபோன்ற செய்கைபல இந்தியாவிலுள்ள மட்டும்
நவைபோன்ற சுயராஜ்யம் நமக்கரிதே நலமரிதே
மாதாவின் வயிறெரிய வளங்களும் பணங்களும் கொடுபோகும்
சோதாவெள்ளையர் உளமட்டும் சொல்லுவதென்ன
[தரித்திரமே

கப்பல்

எலஎலோ பூனைக்கப்பல் - இலங்குதம்மா சென்னையிலே
மாலைவந்து இறங்கினவே வளமாம் எலிக்கன்றுகளுடனே
...சிறுத் தெலிகள்புலிவிதவிதமாய்க் கூடினவே
...கொள்ளை கூட்டமெலிகள் மீகாமியோடு
[வந்ததம்மா,

முடுகு.

அஞ்சாமல் பஞ்சாபில் ஆடினை—பாடின
அறைவிட்டு நெல்லையெலாம் கொரித்தன-செரித்தன
துஞ்சாமல் துரைவீட்டு துணிகளையும்—மணிகளையும்
துண்டுதுண் டாக்கியே தொலைத்தன—கலைத்தன
மிஞ்சாமல் கலைஞான வித்தையை—புத்தியை
விளக்கமிலாதபடி அடித்தன—இடித்தன
விஞ்சார்ந்த மேருவெனும் பணங்களை—கணங்களை
வேணமட்டும் கொடுபோய் மேய்ந்தன—காய்ந்தன
(ஏலஏலோ)

பிள்ளைமாத்து

(இலுமிச்சம் பழத்திற்கு ஆசையுண்டானுக்கால்என்றமெட்டு)

நாட்டின் நலம் பெறவே ராட்டினம் சுற்றவேண்டும்
நமது குழந்தை சற்றே வாங்கும்—சாமி
நமது குழந்தை சற்றே வாங்கும்—சாமி
வாட்டஞ்செய் ஜவுளிக்கடை மறியல்கள் செய்யவேண்டும்
மகத்தான புத்திரனை வாங்கும்—சாமி (மகத்தா)
பூட்டமாம் கள்ளுக்கடை மறியலுக்கு போகவேண்டும்
புண்ணியரே புத்திரனை வாங்கும்—சாமி (புண்)
வீட்டக வேலைபல மேன்மையுறச் செய்யவேண்டும்
வித்தகரே குழந்தையை வாங்கும்—சாமி (வித்தக)

கதராடைக்கும்மி.

1 கண்ணுக் கினிதாங் கதருடையே—எங்கள்
காந்தி யுரைத்த கதருடையே
மண்ணிற் பிறந்திட்ட மானிடர்க் கென்றும்
மனப்பைத் தருநற் கதருடையே.

2 வேனிற்காலத்தில் மிகக்குளிர்ந்து பனி
மிக்க குளிர்காலத்தில் வெதும்பி
மேனிக் கிதஞ்செய்து மேதினி மீதில்
விளங்கிடு மென்றுங் கதருடையே.

3 கெட்டி நெசவாங் கதருடையே பொருட்
கேட்டைத் தவிர்க்குங் கதருடையே
கட்டிடு வோர்க்குக் கவலைகள் தீர்த்துக்
களிப்பைத் தருமே கதருடையே.

4 சற்று முறுதியில் லாப்புற நாட்டுத்
துணிநெச வுத்துணி யைப்போல
இற்று விரைவிற் கிழியாமல்நீடித்
திருந்து விளங்குங் கதருடையே

5 அன்னிய நாடையிற் றள்ளிக்கொள்ளும்பொரு
ளத்தனை யும்வெளிச் செல்லாமல்
நன்னல மானநம் நாட்டில் பெருகிட
நாளும் புரியுங் கதருடையே.

6 கைத்தொழி லோங்கியே ஏழை மனிதர்
கலக்க மில்லாமற் பிழைத்திடவே
எத்தினமு மவர்க் கேற்றபொருள் கொடுத்
தின்ப மளிக்குங் கதருடையே.

7 பஞ்சத்தைப் போக்குங் கதருடையே வரு
பங்கத்தை நீக்குங் கதருடையே
வஞ்ச மிகுத்திடு மன்னியர் சூதினை
மங்கிடச் செய்யுங் கதருடையே.

8 வேதனை தீர்க்குங் கதருடையே பண
மிஞ்சப் புரியுங் கதருடையே
மாதர்க்கு மாடவர் தங்களுக்குந் தினம்
மங்கள மீயுங் கதருடையே.

9 இந்திய மக்க ளடிமைத் தனத்தினின்
றென்றும் விடுபட் டிருந்திடவே
இந்த வுலகி லுதவி புரிந்திட
எற்றது போற்றுங் கதருடையே.

10 என்றுஞ்சுய மரியாதையைப் போற்றிட
எண்ணும் சகோதர சோதரிகாள் !
நன்று தருங்கதராடை புனையுங்கள்
நம்மை யுயர்த்துங் கதருடையே.

மதுவிலக்கு

"குடியன் மனைவி குமறியழும் நிலை"

கரும்புத்தோட்டத்திலே என்ற மெட்டு—(பாரதி.)

கள்ளைக் குடிப்பாரோ கெட்ட கள்ளைக் குடிப்பாரோ—மக்கள்
காதல் மிகுந்துநல் நீதி தவிர்த்துத்தன்
கைப்பொருளுமிழந்தே பெருங் கைப்பொருளுமிழந்தே—வீட்டிற்
கண்ணைக் கசக்கிக் கலங்கி வருந்தித்தன்
பெண்ணு மழுதழுதே நல்ல பெண்ணு மழுதழுதே—இந்தப்
பேர்பெற்ற பக்காக் குடிகாரப் பாவியைப்
பேணியோ மாலையிட்டேன் நான் பேணியோ மாலையிட்டேன்-வாய்
பேசவுங் கூசுதே நாடவும் வீசுதே (கள்ளைக்) (1)

சொல்லத் தொலையாதே என்றுஞ் சொல்லத் தொலையாதே—நான்
துன்பப் படுநிலை இன்ப நிலையினர்
தூக்கி விலக்காரோ நன்கு தூக்கி விலக்காரோ—இவர்
துட்டனே தேகக் கட்டு மிழந்தெனைப்
பட்டினி போடுகிறார் தினம் பட்டினி போடுகிறார்—சிறு
பச்சைக் குழந்தை பயந்து நடுங்கிடச்
சண்டையும் போடுகிறார் வீண் சண்டையும் போடுகிறார்—அப்போ
தன்னிலை மாறித் தயங்கி நடுங்குறார் (கள்ளைக்) (2)

கஷ்டப் படுத்துகிறார் பெருங் கஷ்டப் படுத்துகிறார்—கொடுங்
காட்டிலும் நாட்டிலும் வீட்டிலும் ரோட்டிலும்
போதை வெறியாலே பொல்லாப் போதை வெறியாலே—நல்ல
புத்தியுங் கெட்டுப் புரண்டு உருள்கிறார்

ரத்தமுங் கெட்டிடவே சுத்த ரத்தமுங் கெட்டிடவே—பலர்
நாடிக் கரங்கொட்டிக் கூடிச் சிரித்திட
வாந்தி யெடுக்கின்றார் கள்ளை வாந்தி யெடுக்கின்றார்—சுக
வாழ்வு மழிந்து வறுமையி லாழ்ந்திடக் (கள்ளைக்) (3)

கள்ளுக்குத் துட்டிலையேல் தென்னங் கள்ளுக்குத் துட்டிலையேல்
காப்புஞ் சொலுசும்நற் காதணி கம்மலும் [—அந்தோ
தாவென் றதட்டிடுவார் இப்போ தாவென் றதட்டிடுவார்—நகை
தந்தாலே ஆச்சு தராவிடி லேச்சுடன்
சாக அடித்திடுவார் என்னைச் சாக அடித்திடுவார்—பின்
தாலியும் விற்றுத் தரித்திரப் பேயாலே
பிச்சை யெடுக்க வைப்பார் ஐயோ பிச்சை யெடுக்கவைப்பார்—இவர்
பேயாய் விழித்தெங்கும் நாயாய் அலைகுவார் (கள்ளைக்) (4)

நீதி நெறியிலையோ நல்ல நீதி நெறியிலையோ—இந்த
நேய மிகுத்திடும் இந்திய நாட்டிலே
நீக்கு முறையிலையோ இதை நீக்கு முறையிலையோ—எங்கும்
நீக்க மறநின்று காக்குங் கடவுளே!
கண்ணு முனக்கிலையோ நோக்குங் கண்ணு முனக்கிலையோ-எமைக்
காத்தருள் என்றபடி கைகுவித் தேன் இன்றே
நல்ல வரமளிப்பாய் வாழும் நல்ல வரமளிப்பாய்—தமிழ்
நாட்டெங் கதிர்வேலின் பாட்டை யுணர்ந்தும் பின் (கள்ளைக்) (5)

சமத்துவம்.

(சுத்த சுதேசித்துணி என்றமெட்டு)

வெள்ளைநிற முள்ளதொரு பூனையொன்று எங்கள்
வீட்டினிலே வளர்ந்ததுவும் மேன்மையுறக்கண்டீர்

பிள்ளைபல பெற்றதம்மா பேருக் கொருநிறமாய்
பேசரிய சாந்துநிறம் பிறந்ததொரு குட்டி

மெள்ளநகர் பாம்பின்நிறம் விளைந்தனவோர் குட்டி
மெல்லிநல்லாள் நிறத்தினிலே விளங்கினவோர்குட்டி.

கள்ளையொத்தும் கருப்பையொத்தும் கலந்தபோர்நிறமாம்
கனகமணி நிறமதிலும் சனிந்தகுட்டி பலவே

எத்தனைதான் நிறமிருந் தாலுமந்தக்குட்டி
யாவும்ஓரே தாமன்றோ என்சொல்வீர் சொல்வீர்?

வித்தசமாய் நிறபேதம் விள்ளுவதும் நன்றோ ?
விளப்புவீர் வெள்ளையரே விளக்கமுற நியாயம்

சுத்தமனதுள்ள எங்கள் காந்திமகான் சொல்லும்
சுயராஜ்யம் தருவதிலே துணைநின்று வெல்லும்

புத்திவந்தபிறகேயன்றி புரட்டையெல்லாம் அறிந்தோம்
பூனைபோன்று பதுங்குவது போதும் போதும் போதும்.

குயிற் கண்ணி

1 மேனிசிறுத்தாலும் வேடங்கறுத்தாலும்
கானங்கறுக்குமோடி — குயிலே
ஞானஞ்சிறுக்குமோடி

2 பார்க்கக் கறுப்பாகப் பாங்காயிருந்தாலுங்
காக்காயுனைப்போலுமோ — இருள்
கார்மேக மாயிடுமோ

3 வெஞ்சுரக்கோடையினும் வேகும் பொறுமைவளர்
வஞ்சகர் நெஞ்சத்திலே — குயிலே
மஞ்சுறக்கொஞ்சவையோ

4 தன்னலக்கூண்டினிலே தங்கவிலங்கினிலே
இன்பம் பிறந்திடுமோ — குயிலே
என்றும் சுதந்தரமே

5 ஆசையிருட்டினிலே அடிமையின் கட்டினிலே
பாசப்பட்டோர்க்கிருக்குமோ — குயிலே
பாராது பார்க்குஞ்செயல்

காமக்குரோதத்திற் கண்கெட்டழிபவர்
சேமமறியாரடி—குயிலே
செஞ்சொல்லுங்கேளாரடி

7 ஏகாந்தவனத்திலுன் இன்பக்கனிரசமும்
மோகாந்தர்காணுவரோ—குயிலே
உல்லாசம்பூணுவரோ

8 மோனங்கடந்தொளிரும் முத்திப்பரவெளியில்
ஆனந்தமாய்ப்பாடியே—குயிலே
ஆன்மசுகந்தேடுவாய்

9 இன்சொல்பெருக்கினிலே இன்பவமுதினிலே
யன்பாயுனைநாடினர்—குயிலே
ஆண்டவனைக்கூடினர்

10 பச்சிளம்பண்ணொடும் பாரினைக்கூட்டுகின்றாய்
மெச்சியுனையறிவாய்—குயிலே
வேதச்சுவைபெறுவார்

11 ஓங்காரசிற்சபையில் உலவிக்குலாவும் உன்னை
காண்பாருமில்லையடி—குயிலே
காலக்கொடுமையடி

12 சாதிசமயநிறச் சச்சரவில்லையுன்
வேதச்சமரசத்திற்—குலகை
வீரமுடன் அழைப்பாய்

13 காசினிக்கெல்லாம் நீ காட்டும் அறவழிக்கு
தேசவித்யாசமுமுண்டோ—குயிலே
தெய்வம் வெவ்வேறுமுண்டோ

14 ஏட்டிலெழுதாமல் எண்ணத்தடங்காமல்
பாட்டொன்று பாடுகின்றாய்—குயிலே
பரவசங்காட்டுகின்றாய்

15 என்னுயிர்க்கிளையுடன் இன்பவசந்தத்தில்
உன்னிசைப்பண்முழங்க—யுலகை
ஒற்றுமைக்கேயழைப்போம்

16 எல்லாரும் தன்மயர்கள் எல்லாரும் என்மயர்கள்
எல்லாரும் மன்னரடி—குயிலே
என்றாமிஃ துண்மையடி

17 நித்தியசக்தியினை நெஞ்சத்துச்சோலையிலே
சுத்தசமத்துவத்திற்—குயிலே
சுதந்தரமாய்ப்பாடுவோம்

18 காதலுமன்புங் கடவுளுஞ்சத்தியமும்
ஓதிடிறொன்றடியோ—குயிலே
ஓம்சக்தியென்னடியோ

கிளிக் கண்ணி

1 நெஞ்சி லுரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வா ரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி

2 கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி—கிளியே
நாளில் மறப் பாரடி

சொந்த அரசும் புவிச் சுகங்களு மாண்புகளும்
அந்தகர்க் குண்டாகுமோ?—கிளியே
அலிகளுக் கின்ப முண்டோ?

4 கண்க ளிரண்டிருந்தும் காணும் திறமையற்ற
பெண் களின் கூட்டமடி—கிளியே
பேசிப் பய னென்னடி.

5 யந்திர சாலையென்பார் எங்கள் துணிகளென்பார்
மந்திரத்தாலே யெங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வ துண்டோ?

6 உப்பென்றும் சீனியென்றும் உள்நாட்டுச்சேலை [யென்றும்
செப்பித் திரிவாரடி—கிளியே
செய்தவ மறியாரடி

தேவியர் மானமென்றும் தெய்வத்தின் பத்தி [illegible]றும்
நாவினாற் சொல்வ தல்லால்—கிளியே
நம்புத லற்றாரடி.

8 மாதரைக் கற்பழிக்கும் வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயிரைக்—கிளியே
பேணி யிருந்தாரடீ.

9 தேவி கோயிலிற் சென்று தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்—கிளியே
அஞ்சிக் கிடந்தாரடீ.

10 சிந்தையிற் கள் விரும்பிச் சிவசிவ வென்பது போல்
வந்தே மாதர மென்பார்—கிளியே
மனதி லதனைக் கொள்ளார்

11 பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப்
பழமை யிருந்த நிலை—கிளியே
பாமர ரேதறிவார்

12 பஞ்சத்தும் நோய் களிலும் பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத் தம் கண்ணாற் கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பாரடீ.

13 தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சியுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே
வந்தே மாதர மென்பார்.

வாழ்த்து

ஆசிரியப் பா.

வாழிய செந்தமிழ் ! வாழ்கநற் றமிழர் !
வாழிய பாரத மணித் திரு நாடு !
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க !
நன்மை வந் தெய்துக ! தீதெலாம் நலிக !
அறம் வளர்ந்திடுக ! மறம் மடி வுறுக !
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக !
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க !
வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !

[பாரதி]